அதிகரித்து வரும் மின் தேவைகளைக் கவனத்தில் கொண்டு

# தமிழ்நாடு முழுவதும் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தகவல்!

சென்னை, மார்ச் 25- சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, அதிகரித்து வரும் மின் தேவைகளை கவனத்தில் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என்று குறிப்பிட்டார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**மு.சக்கரபாணி:** வானூர் தொகுதி, கிளியனூர் கிராமத்தில் உள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** வானூர் தொகுதி, வானூர் ஒன்றியம், கிளியனூர் கிராமத்தில் உள்ள உதவி மின்பொறியாளர் அலுவலகத்தை உதவி மின் கோட்டப் பொறியாளர் அலுவலகமாக தரம் உயர்த்த வேண்டிய அவசியம் தற்போது இல்லை என உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மு.சக்கரபாணி:** கிளியனூர் 33/11KV துணை மின் நிலையத்தை விரிவாக்கம் செய்து, 110/33KV துணை மின் நிலையமாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, கிள்ளியனூர் துணை மின் நிலையத்தை தரம் உயர்த்துவது என்பதற்குப் பதிலாக, துணை மின் நிலைய அலுவலகத்தைத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதற்கேற்றாற்போல் அமைச்சர் அவர்கள் பதிலளிக்குமாறுக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** வானூர் தொகுதி, கிளியனூரில் மொத்தம் 16 MVA திறன் கொண்ட மின் மாற்றிகள் இயக்கத்தில் உள்ளன. இந்த மின்மாற்றிகளின் மொத்த நிறுவு திறன் 14.65 MVA ஆகும். தற்போது, கிள்ளியனூர் பகுதியின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய மேற்கண்ட துணை மின் நிலையமே போதுமானதாக உள்ளது. இருந்தபோதும், உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, துறையின் சார்பாக ஆய்வு செய்து, அங்கே ஏற்பட்டிருக்கிற மின் தேவையைக் கவனத்திலே கொண்டு, தேவை ஏற்படின் முன்னுரிமை அடிப்படையில் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மு.சக்கரபாணி:** வானூர் தொகுதிக்குட்பட்ட கண்ணமங்கலம் கோட்டம், பொம்மையார்பாளையம் கிராமத்தில் 110/22KV துணை மின் நிலையத்தை உடனடியாக அமைக்க அரசு முன்வருமா என்பதோடு, வானூர் தொகுதி, கடலோர கிராமங்களில் புயல், வெள்ளச் சீற்றங்களின்போது மின் கம்பங்கள் சாய்ந்து மின்தடை ஏற்படுவதோடு, உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. எனவே, கடலோர பேரிடர் அபாய குறைப்புத் திட்டத்தின்மூலம் மேல்நிலை மின் பாதைகளை, புதைவட மின் கம்பிப் பாதைகளாக மாற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

### விழுப்புரத்தில் புதிய துணை மின் நிலையங்கள்!

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** விழுப்புரம் மாவட்டத்தில் கூடுதலாகத் தேவைப்படுகிற மின் தேவையைக் கவனத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்கள், விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 1,571 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, அதில் வானூர் தொகுதியில் 357 மின்மாற்றிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அதேபோல, விழுப்புரம் மாவட்டத்திற்கு ஆறு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கும் முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி, அதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் சுட்டி காட்டியிருக்கின்ற அந்தத் துணை மின் நிலையம், இந்த ஆண்டு கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மேல்நிலைக் கம்பிகளைப் புதைவட கம்பிகளாக மாற்றுவதற்கு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

முதற்கட்டமாக மாநகராட்சிப் பகுதிகளில் அந்தப் பணிகளை முழுமையாக 100% நிறைவேற்றிட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கிறார்கள். அதற்கானப் பணிகளைத் தொடங்கி இருக்கிறோம். படிப்படியாக, அடுத்த நிலைகளில் நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் என தேவைப்படுகின்ற இடங்களை துறை கவனத்தில் கொள்ளும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**என்.அசோக்குமார்:** பேராவூரணி தொகுதி தென்னை



விவசாயிகளை அதிகம் கொண்ட தொகுதியாகும். ஆழ்க்குழாய் கிணறுகளில் உள்ள தண்ணீரை நம்பி அதிகமான விவசாயிகள் அங்கே விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். எங்களுக்குத் தனியாக செயற்பொறியாளர் அலுவலகம் ஒன்று தேவைப்படுகிறது. பட்டுக்கோட்டையிலிருந்து பிரித்து எங்களுக்கு தனியாக செயற்பொறியாளர் அலுவலகம் அமைத்துத் தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** உறுப்பினர் ஏற்கெனவே செயற்பொறியாளர் அலுவலகம் கேட்டு என்னிடம் கடிதம் வழங்கியிருக்கிறார். துறைக்கு அந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அது ஆய்வில் உள்ளது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### திட்ட மதிப்பீடுகள்!

**மா. செந்தில்குமார்:** கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி பகுதியில் மின் பற்றாக்குறை அதிகமாக ஏற்படுவதன் காரணமாக, பெருங்கூர் பகுதியிலே 110/22KV துணை மின் நிலையம் அமைப்பதற்கு 2022-ல் ஒரு மனு கொடுத்திருந்தேன். அப்போது, நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று சொன்னீர்கள். தற்போது சடையம்பட்டில் main அமைப்பு இருக்கிறது. அதிலிருந்து பிரித்துதான் பெருங்கூருக்குக் கேட்கிறோம். அதைப் பிரித்து கொடுத்து விட்டால் அங்கிருக்கும் சிக்கல், மின் பற்றாக்குறைப் பிரச்சினைத் தீர்க்கப்படும்.

அதேபோல, SE Officeமேற்பார்வை பொறியாளர் அலுவலகம் தனியார் கட்டடத்தில்தான் இயங்குகிறது. அதையும் அந்த 3.5 ஏக்கரில் கட்டி தருவதாகச் சொல்லி மூன்று கோடி நிதி ஒதுக்கியிருப்பதாக சொன்னார்கள். அதையும் கட்டிக் கொடுக்குமாறும், சடையம்பட்டியிலிருந்து பிரித்து பெருங்கூர் பகுதிக்கு துணை மின் நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என அமைச்சர் அவர்களை கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு மூன்று புதிய துணை மின் நிலையங்கள், அதிலே உறுப்பினருடைய கள்ளக்குறிச்சி தொகுதியிலும் ஒரு புதிய துணை மின் நிலையம் அடங்கியிருக்கின்றன. 3.5 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மின் வாரியத்திற்கு வகை மாற்றம் செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மின்வாரியத்தினுடைய நிர்வாக அனுமதியும் பெறப்பட்டு, விரைவில் அதற்கான பணிகளை தொடங்கவிருக்கிறோம் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொண்டு, அதே இடத்தில் அலுவலகம் கட்டுவதற்கான கோரிக்கையும் வைத்திருக்கின்றார்கள். துறை அது குறித்து ஆய்வு செய்யும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**வி.அமலு:** எனது குடியாத்தம் தொகுதிக்குட்பட்ட மின்சார அலுவலக கட்டடம் நான்கு ஆண்டுகளக வாடகை கட்டடங்களில் இயங்கி வருகிறது. அதுவும், மோசமான நிலையில் பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வருகிறது. இதை ஒன்றிணைத்து ஒரே கட்டடமாக செயல்படுத்துவதற்கு, புதிதாக ஒரு கட்டடம் கட்டித்தர வேண்டும். அதற்கான இடவசதியும் உள்ளது. என் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான இந்தக் கட்டடத்தை கட்டித்தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** உறுப்பினர் அவர்கள் இது குறித்து ஏற்கனவே என்னிடம் கடிதம் வழங்கியுள்ளார்கள். அந்தக் கடிதம் துறைக்கு அனுப்பப்பட்டு, இந்த ஆண்டு அது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென துறையினுடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. எனவே, விரைவில் அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் நகராட்சி சார்பில் தாராபுரம் நகர்மன்ற தலைவர் கு.பாப்புகண்ணன் தலைமையில், நகராட்சி ஆணையாளர் திருமால் செல்வம் முன்னிலையில் கோடை வெப்பத்தை தணிக்கும் வகையில் பொது மக்களுக்கு தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தலை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் அமைச்சர், என்.கயல்விழி செல்வராஜ் எஸ். முருகானந்தம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சாத்தான்குளம் தொகுதி

# எழுவரை முக்கியில் ‘சிப்காட்’ தொழிற்பூங்கா அமைத்திட நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உறுதி!

சென்னை, மார்ச் 25- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பேசிய தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, “சாத்தான்குளம் வட்டம் - எழுவரை முக்கியில் ‘சிப்காட்’ தொழிற் பூங்கா அமைப்பதற்கான முயற்சிகளை கழக அரசு நிச்சயம் எடுக்கும்” என்று உறுதியளித்தார்.

கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**செ. ஊர்வசி அமிர்தராஜ்:** சாத்தான்குளம் வட்டம், எழுவரைமுக்கியில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

**தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா :** சாத்தான்குளம், எழுவரைமுக்கியில், சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள் குறிப்பிடும் 100 ஏக்கர் பூமிதான நிலத்தோடு, அரசு புறம்போக்கு நிலங்கள் 300 ஏக்கர் உட்பட 400 ஏக்கர் நிலப் பரப்பில் புதிய சிப்காட் தொழிற்பூங்கா உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை திராவிட நாயகன் அவர்களின் அரசு ஆராய்ந்து வருகிறது. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின், அங்கே ஒரு சிப்காட் அமைப்பதற்கான முயற்சிகளை அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செ. ஊர்வசி அமிர்தராஜ்:** குலசேகரப்பட்டினம் ISRO ராக்கெட் ஏவுதளம் மற்றும் உடன்குடி அனல்மின் நிலையம் ஆகியவற்றிலிருந்து சாத்தான்குளம் தாலுகா, எழுவரைமுக்கி ஊராட்சி சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ளது. அந்த எழுவரைமுக்கி ஊராட்சியில் அரசுக்குச் சொந்தமான இடம் சுமார் 300 ஏக்கர் நிலம் உள்ளது. அதைத் தொடர்ந்து பிடாநேரி மற்றும் ஏரல் தாலுகா, வெள்ளமடம் ஊராட்சியில் அரசுக்குச் சொந்தமாக ஆக மொத்தம் 800 ஏக்கர் நிலம் உள்ளது. இவ்விடங்களில் சிப்காட் அமைத்து, ராக்கெட் ஏவுதளம் மற்றும் அனல்மின் நிலையத்திற்குத் தேவையான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்க வேண்டும். அதற்கு அரசு முன்வருமா?

**அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா:** தூத்துக்குடி மாவட்டம் என்பது பிரதானமான மாவட்டம். நல்ல அற்புதமான சாலைகள், அற்புதமான இரயில் வசதி, மிக முக்கியமான துறைமுக வசதி ஆகியவை உள்ள ஒரு மகத்தான மாவட்டம். தொழில் துறையில் ஒரு மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்டுவரும் மாவட்டம். ஏறத்தாழ 3,890 ஏக்கர் பரப்பளவில், 4 சிப்காட்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு 108 நிறுவனங்கள் அங்குள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் கவிஞர் திருமதி கனிமொழி அவர்களும் அங்கு புதிய சிப்காட்களை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து வருகிறார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடம் பிரதான சாலையிலிருந்து சற்று தள்ளி இருக்கிறது. Distance அதிகமாக இருப்பதால், அங்கு சாத்தியக்கூறுகள் இருப்பின், நிச்சயமாக TechnoEconomic Feasibility Report நன்றாக வருமேயானால், நிச்சயமாக அங்கு சிப்காட் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு திராவிட நாயகன் அவர்களின் அரசு நிச்சயமாக செய்யும்.

இங்கே தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே 4 SIPCOTகள் இருக்கின்றன. இன்னும் 3 SIPCOTகள் நில எடுப்பு நிலையில் உள்ளன. ஏறத்தாழ 5 ஆயிரம் ஏக்கர். அதைத்தாண்டி உத்தேசமாக 4 புதிய திட்டங்கள் இருக்கின்றன. இவை எல்லாமே நிறைவடைந்து விட்டால் தூத்துக்குடி மாவட்டத்திற்கு மட்டும் ஏறத்தாழ 10 SIPCOTகள் உருவாக்கும் பெருமை இந்த திராவிட



மாடல் நாயகர் அவர்களின் ஆட்சியைச் சாரும். இந்த ஆட்சியில் மட்டுமே ஏறத்தாழ 7 SIPCOTகள் உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

**செ. ஊர்வசி அமிர்தராஜ்:** அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அதேபோல, ஸ்ரீவைகுண்டம், ஏரல், கருங்குளம் ஆகிய பகுதிகளில் சுமார் 11 ஆயிரம் ஏக்கரில் வருடத்திற்கு 50 ஆயிரம் டன் வாழை விளைவிக்கப்படுகிறது. அவற்றைப் பயன்படுத்தி, பதப்படுத்தி, ஏற்றுமதி செய்ய cold storage facility அல்லது அவற்றை மதிப்புக்கூட்டல் பொருளாக மாற்றி, துகள்களாக்கி, அழகு சாதனப் பொருட்களாகவோ அல்லது ஊட்டச்சத்து பொருட்களாகவோ தயாரிக்க, தொழில் துறை மூலமாக அரசின் திட்டம் ஏதும் உள்ளதா என்பதை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா:** அது SIDCO சம்பந்தப்பட்ட கேள்வி. இருந்தாலும் பதில் சொல்கிறேன். திராவிட நாயகன் அவர்கள் உலகத்தின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தொழில் வளர்ச்சிக்கான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்குச் செல்லும்போதெல்லாம் பெரிய நிறுவனங்கள் மட்டுமல்லாமல், விவசாயப் பெருங்குடி மக்களின் விளை பொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல் செய்து அதன்மூலம் ஒரு பெரிய வளர்ச்சியை விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் வழங்கும் அந்த வேளையில் திராவிட நாயகன் அவர்கள் இறங்கியிருக்கிறார்கள். நீங்கள் கூறியவாறு இந்த Banana Processingக்கு நிறைய நிறுவனங்கள் கேட்டிருக்கின்றன. ஏற்கெனவே, தேனியில் ஒரு சிறிய Processing unit போடுவதற்கான பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. இங்கே நீங்கள் சொல்லும் அளவிற்கு 50 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு இருக்குமானால், நிச்சயமாக சாத்தியக்கூறுகள் குறித்து சிப்காட் நிறுவனமும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களும், SIDCO வழியாகவும் அதைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகளளை இந்த திராவிட நாயகன் அவர்களின் அரசு செய்யும்.

கூடுதல் தகவலாக திராவிட நாயகன் அவர்களின் அரசில்தான் தூத்துக்குடியில் மிகப்பெரிய வளர்ச்சிகள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. பேரவைத் தலைவர் அவர்களுக்கே இது நன்றாகத் தெரியும்.

16 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் VinFast நிறுவனத்திற்கு மிகப்பெரிய ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் 2024 ஜனவரி மாதம் திராவிட நாயகன் அவர்கள் நடத்திய Global Investors Meet (GIM)-ல் மிகப்பெரிய கையெழுத்திடப்பட்டது. 16 ஆயிரம் கோடி முதலீட்டில், பல்லாயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று உறுதியளித்தோம். இதையெல்லாம் சொல்வார்கள், நடக்குமா என்று பலரும் அன்று கேட்டார்கள். ஜனவரி மாதம் புரிந்துணர்வு ஒப்பந்தம், பிப்ரவரி மாதம் அடிக்கல் நாட்டு விழா, இன்னும் ஒரே ஆண்டில், அதாவது, இந்த ஆண்டிற்குள்ளாகவே அங்கு அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு, எல்லோருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் நமது திராவிட நாயகன் அவர்களின் வேகம், அந்த speed, அந்தத் துரிதமான உழைப்பிற்கு இதுவே ஒரு சான்று .

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# திருவாரூர் தொகுதி - கொரடாச்சேரியில் துணை மின் நிலையம் அமைத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் - பூண்டி கே.கலைவாணன் கோரிக்கை!

சென்னை, மார்ச் 25 - சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடை பெற்ற விவாதம் வருமாறு:-

**கே.கலைவாணன்:** திருவாரூர் சட்டமன்ற தொகுதியை உள்ளடக்கிய கொரடாச்சேரியில் 110/33 துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் இலவசமாக வழங்கப்பட்டுள்ள சூழ்நிலையில், 2 ஆண்டுகாலமாக



தொடர்ந்து இந்தக் கோரிக்கை வைக்கப்படுகின்றது. ஆழ்துழாய்க் கிணறுகள் மூலம் விவசாயிகள் பயன்பெறும் அந்த கொரடாச்சேரி பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துத் தருவார்களா?

**அமைச்சர செந்தில்பாலாஜி:** திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதனடிப்படையில், அவர் தொகுதியில் 3 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த 3 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகளையும் இந்த ஆண்டிலேயே எடுத்துக்கொள்வதற்காக நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு விராலிமலை மத்திய ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய செயலாளர் கே.பி.அய்யப்பன் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் மாட்டு வண்டி & குதிரை வண்டி பந்தயத்தை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். மூன்று பிரிவுகளாக நடைபெற்ற பந்தயத்தை ஆயிரக்கணக்கானோர் கண்டு ரசித்தனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ரூ.3 லட்சத்துக்கும் மேலான பரிசுத்தொகையும், சுழற்கோப்பைகளும் வழங்கப்பட்டன. நிகழ்வில் த.சந்திரசேகர், கே.ஆர்.என்.போஸ், மு.பி.ம.சத்தியசீலன், முபி.மணி, சி.சண்முகம், எம்.ஆர்.அன்பழகன், பி.கணேசன், செல்லத்துரை, கிருஷ்ணன், செந்தில்நாதன், பி.குமார், ஜெயபால், வாட்ச் கண்ணன், பாலசுப்பிரமணியன், ராதா, பி.ராஜா, சரவணன், நந்தினி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள - மாநகராட்சி

# திருமண மண்டபத்தை இடித்து விட்டு நவீன வசதிகளுடன் கட்டித் தாரீர்!

## சட்டப்பேரவையில் - வி.சி.சந்திரகுமார் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 25 - சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:

**வி.சி.சந்திரகுமார் :** ஈரோடு மாநகராட்சிக்குச் சொந்தமான மிகவும் பழமையான திருமண மண்டபம் ஈரோடு மத்திய பேருந்து நிலையத்தின் அருகில் உள்ளது. அத்திருமண மண்டபத்தை ஏழையெளிய மக்கள் தான் அதிக அளவில் பயன்படுத்தி வந்தனர். இப்போது அத்திருமண மண்டபம் அப்புறப்படுத்தப்பட்டு அந்த இடம் மத்திய பேருந்து நிலைய வளாகத்துடன் இணைக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் அத்திருமண மண்டபத்தை இடித்து விட்டு, அதே இடத்தில் மீண்டும் புதியதாக நவீனவசதிகளுடன்கூடிய திருமண மண்டபம் கட்டித்தர ஆவன செய்வாரா?

**அமைச்சர் கே.என்.நேரு:** எப்படி நிதிநிலை அறிக்கை ஐந்தாவது ஆண்டுநிறைய உறுப்பினர்கள், மேயர்கள், நகராட்சித் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் எல்லாம் எங்களுக்கு மழைநீர் வடிகாலுடன்கூடிய சாலைகள் வேண்டுமென்று கேட்டிருக்கிற காரணத்தால் அதற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இரண்டாவதாக, சாலைகளோடு மட்டுமல்ல L.E.D. விளக்குகளாக மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் முன்னுரிமை தரப்படுகிறது. மழைநீர் வடிகாலோடு கழிவுநீர் ஓடை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்



கும் முன்னுரிமை வழங்கப்படுகிறது. கழிவறை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கும் முன்னுரிமை வழங்கப்படுகிறது. எனவே, இதுபோன்ற அடிப்படை தேவை களை அவர்கள் தேவையென்று சொல்கிற காரணத்தால் அதற்கு இந்த ஆண்டு முன்னுரிமை வழங்கி, வழங்கப்பட்டு வருகிறது.

திருமண மண்டபம் போன்ற பணிகள் நடைபெற வேண்டுமென்று சொன்னால், ஒன்று பொது நிதி அதிகமாக இருக்குமானால், அவர்களுக்கு அந்தப் பொது நிதியிலே கட்டிக்கொள்வதற்கு உரிய அனுமதியை எங்களால் தர முடியும். இல்லையென்று சொன்னால் மிகவும் பழமையான மண்டபம்; அத்தியாவசியமென்று மாண்புமிகு உறுப்பினர் கருதினால் அதைப்பற்றி ஆராய்ந்து, அதிகாரிகளுடன் கலந்துபேசி, நிதி நிலைக்கேற்ப அதைச் செய்வதற்கு அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.